## நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள்

### முன்னிலை: திரு.M.ஸ்ரீதர், B.E., M.Plan.,

ந.க.எண்.1540/2019/விம  நாள்:19.09.2019

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள்/மனை வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – கடலூர் மாவட்டம் – பண்ருட்டி வட்டம் – அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் – பண்டரக்கோட்டை கிராமம் – ச.எண்.10/10A, 10/12A –ல் 2.42 ஏக்கர் (அ) 105415.20 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ வினாயகர் நகர் – அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

படிக்க:

1) அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:13.10.2017
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guidelines) ந.க.எண்.13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 03.01.2019 மற்றும் 07.01.2019
4) அரசாணை எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:05.02.2019
5) மனுதாரர் திரு N. ராதாகிருஷ்ணன், விழுப்புரம் அவர்களின் விண்ணப்பம் நாள்:02.08.2019 (Online Application No.DTCP/L/0053107/2017/ dt.15.02.2018

-----

**உத்தரவு:**

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணையின்படியும் பார்வை (3)ல் காணும் வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை (5)ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் அண்ணாகிராமம ஊராட்சி ஒன்றியம், பண்டரக்கோட்டை கிராமம், ச.எண்.10/10A, 10/12A –ல 2.42 ஏக்கர் (அ) 105415.20 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ வினாயகர் நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.அ.வ/ந.ஊ.உ.இ.(வி.ம)எண். R741/2019 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

### மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு | – | 2.42 ஏக்கர் (அ) 105415.20 சதுர அடி |

| | | |
|---|---|---|
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | – | 76 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | – | 12 |
| விற்கப்பட்ட மனை எண்கள். | – | 21 to 26, 29, 60 to 63, 66 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | – | 64 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | – | 1 to 20, 27, 28, 30 to 59, 64, 65, 67 to 76 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | – | 71863.00 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | | |
| பூங்கா – 1 (மனை எண்.18, 19, 20) | – | 3964.00 ச..அடி |
| பூங்கா – 2 (மனை எண்.74, 75 ) | – | 3233.00 ச.அடி |
| மொத்தம் | – | 7197.00 ச..அடி (10.01%) |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

1) பரிசீலனைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | 1 to 20, 27, 28, 30 to 59, 64, 65, 67 to 76 |

பரிசீலனைக் கட்டணமாக (Scrutiny Fees) மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு விற்பனை செய்யப்படாத மனைக்கும், மனை ஒன்றுக்கு ரூ.500/– வீதம் www.tnlayoutreg.in என்ற இணையதள முகவரியில் Online மூலமாகவோ அல்லது The Assistant Director of Town and Country Planning, Villupuram Region அவர்களின் Corporation Bank, Villupuram Branch Account No. 510101006863315-ல் மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்ட விபரம் உறுதி செய்துகொள்ளப்பட வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் (Regularisation Charges) மற்றும் வளர்ச்சிக் கட்டணம் Development Charges)

| மனை எண். | பர[illegible]வு | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு) | வளர்ச்சிக் க[illegible]ணம் (ஒரு சதுர மீட்டருக்கு) |
|---|---|---|---|
| 1 to 17, 27, 28, 30 to 59, 64, 65, 67 to 73 | 6010 ச.மீ | பார்வை (4)ல் காணும் அரசாணையின்படி | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தப்பட வேண்டும்.

அ) <u>வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான (Regularisation Charges) அரசு கணக்குத் தலைப்பு:</u>

| | |
|---|---|
| **Head of Account:**<br>0217 Urban Development – 60 Other Urban Development Schemes 800 Other Receipts-AT Receipts Under Regularisation Charges of Unapproved layouts and plots – DTCP 27 Non Taxation fees – 30 Regularisation.<br>DPC: 0217-60-800-AT – 2730 | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) <u>வளர்ச்சி கட்டணம்</u> (Development Charges) <u>கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில்</u> செலுத்தப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண்.______________________

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1) அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்: 13.10.17-ல் விதி 6 [illegible]-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

Nymy [signature]

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் – 2 நகல்கள்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.
19/9/2014

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்,
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

நகல்:

1) திரு. N. ராதாகிருஷ்ணன்,
த/பெ. நடராஜன் (லேட்),
எண்.23, ரங்கநாதன் ரோடு,
ரங்கசாமி லே–அவுட்,
விழுப்புரம்.
விழுப்புரம் மாவட்டம்.

2) உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
கடலூர் மாவட்டம்.

3) வட்டாட்சியர்,
பண்ருட்டி வட்டம்
கடலூர் மாவட்டம்.

(2, 3) சாலை மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

4) சார்பதிவாளர்,
புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம்,
பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்

சாலை மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

5) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்
கடலூர் மாவட்டம்.

அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) நடவடிக்கைகள்
முன்னிலை திருமதி.வி.சித்ரா.,

ந.க.எண்: ஆ4/0456/2020 நாள்: ..06.2021

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – கடலூர் மாவட்டம் – அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் – பண்டரக்கோட்டை ஊராட்சி – பண்டரக்கோட்டை கிராமம் சர்வே எண்.10/10A, 10/12A –ல் 2.42 ஏக்கர் (அ) 105415.20 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீசெல்வ வினாயகர் நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல்.

பார்வை:

1) அரசாணை நிலை எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD–(3)) துறை நாள்.04.05.2017
2) அரசாணை நிலை எண்.172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD–(3)) துறை நாள்.13.10.2017
3) நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 1540/2019விம, நாள். 19.09.2019
4) வரன்முறைக்கட்டணம் ரூ.2,25,375/– செலுத்திய நாள் 15.02.2021, வளர்ச்சிக்கட்டணம் ரூ.1,50,250/– பண்டரக்கோட்டை ஊராட்சி மனைப்பிரிவு கணக்கில் செலுத்திய நாள் 15.02.2021
5) பண்டரக்கோட்டை ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.88 நாள் 10.02.2021

---

ஆணை:

பார்வை 1 மற்றும் 2ல் காணும் அரசாணை மற்றும் கடிதங்களில் கிராம ஊராட்சிகளில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக வழிகாட்டி நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டம் அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் பண்டாரக்கோட்டை ஊராட்சி பண்டாரக்கோட்டை கிராம சர்வே எண் 10/10A, 10/12A –ல் 2.42 ஏக்கர் (அ) 105415.20 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீசெல்வ வினாயகர் நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் கொ.ஒ.ம.வ ந.ஊ.உ.இ(விம) எண்: R741/2019 என எண் இடப்பட்டு வரன்முறை செய்து வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் ஆணையின் அடிப்படையில் திரு.N.இராதாகிருஷ்ணன் த/பெ நடராஜன்(லேட்) எண்.23.ரங்கநாதன் ரோடு ரங்கசாமி லே–அவுட். விழுப்புரம். விழுப்புரம் மாவட்டம் என்பவரால் பண்டாரக்கோட்டை ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு வரன்முறைக்கட்டணமாக 1 சதுர மீட்டருக்கு ரூ.37.50 – வீதம் 6010 சதுர மீட்டருக்கு ரூ.225375/–(ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து மட்டும்) உரிய அரசு தலைப்பில் 15.02.2021 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் மனைகளுக்கு வளர்ச்சி கட்டணமாக ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/– வீதம் 6010 சதுர மீட்டருக்கு ரூ.1,50,250/– (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) மனைப்பிரிவு உரிமையாளரால் 15.02.2021 அன்று பண்டாரக்கோட்டை ஊராட்சி தனிக்கணக்கில் [illegible] செலுத்தப்பட்டுள்ளன.

மேற்படி திரு.N.இராதாகிருஷ்ணன் த/பெ நடராஜன்(லேட்), எண்.28,ரங்கநாதன் ரோடு, ரங்கசாமி லே–அவுட், விழுப்புரம், விழுப்புரம் மாவட்டம் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள விற்கப்படாத 64 மனைகளுக்கு பரிசீலனை கட்டணம் 1 மனைக்கு ரூ.500/– வீதம் இணையதளம் வாயிலாக செலுத்தியுள்ளார்.

மேலும், பண்டரக்கோட்டை ஊராட்சியில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் பூங்கா எண்–1–க்குரிய மனை எண். 18,19,20 இதன் பரப்பளவு (3964.00ச.அடி) மற்றும் பூங்கா எண். 2க்குரிய மனை எண். 74,75,76 இதன் பரப்பளவு (3233.00 ச.அடி) ஆக மொத்தம் 7197.00 ச.அடி மற்றும் மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மனைப்பிரிவு உரிமையாளரர்களால் புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக புத்தக ஆவண எண்.334/2021 நாள்.23.01.2021–ன்படி கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர், கடலூர் என்ற பெயருக்கு தானப்பத்திரம் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

<u>மனை ஒதுக்கீடு விபரம்</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு | : | 2.42 ஏக்கர் (அ) 105415.20 சதுர அடி |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 76 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 12 (21 to 26,29,60 to 63,66) |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 64 (1to20,27,28,30to59,64,65,67to76) |
| விற்கப்படாத மனைகளின் மொத்தபரப்பளவு | : | 71863.00 ச.அடி |

<u>பூங்கா ஒதுக்கீடு</u>

| | |
|---|---|
| பூங்கா –1 மனை எண். 18,19,20 | இதன் பரப்பளவு (3964.00ச.அடி) |
| பூங்கா –2 மனை எண். 74,75,76 | இதன் பரப்பளவு (3233.00ச.அடி) |
| | மொத்தம் 7197.00 ச.அடி (10.01%) |

பண்டரக்கோட்டை ஊராட்சியில் திரு.N.இராதாகிருஷ்ணன் த/பெ நடராஜன்(லேட்), எண்.28,ரங்கநாதன் ரோடு, ரங்கசாமி லே–அவுட், விழுப்புரம், விழுப்புரம் மாவட்டம் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் கொள்கை அளவிலான வரன்முறை ஆணை மற்றும் சம்பந்தப்பட்ட அரசு தலைப்பில் வரன்முறைக் கட்டணம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சி கட்டணம் செலுத்தியதின் அடிப்படையில் பண்டரக்கோட்டை ஊராட்சியில் அமைந்துள்ள ஸ்ரீசெல்வ விநாயகர் நகரில் மனை எண். 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,27,28,30,31,32,33,34,35,36,37,38,39,40,41,42,43,44,45,46,47,48,49,50,51,52,53,54,55,56,57,58,59,64,65,67,68,69,70,71,72,73,74,75 மற்றும் 76 ஆகிய மனைகள் மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள், நீர்நிலைகள், அரசு புறம்போக்கு திறந்தவெளி ஒதுக்கீடு அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலைகள் மற்றும் Rail Corridors, பொதுப்பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம் அதிக உயர்மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது.
2. மனைப்பிரிவு கட்டமைப்பு (Framework) செய்த இம்மனைப்பிரிவில் அமையும் மனையின் உரிமையாளர்கள் அவர்களின் மனையை முறைப்படுத்தப்படாமல் இருப்பின் மின்சாரம், தெருவிளக்கு, குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு துண்டிக்கப்படும் மற்றும் சாலை வசதி செய்து கொடுக்க இயலாது.

3. வரன்முறைப்படுத்தாத மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.

4. மனைப்பிரிவில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதாக இருப்பின் நகர் ஊரமைப்பின் துறையில் முன் அனுமதி பெறவேண்டும்.

5. மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பூங்காக்கள் மற்றும் சாலைகளை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) பெயருக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் தனது சொந்த செலவில் உட்பிரிவு செய்து தரவேண்டும்.

6. மனைப்பிரிவு உரிமையாளரால் நீர்வழிப் புறம்போக்கினை எவ்விதத்திலும் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது.

7. இம்மனைப்பிரிவில் நிலங்கள் தொடர்பான மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லங்க சான்றின் சரிதன்மையை உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டது. இதில் நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் இந்த மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்படும் வரன்முறை ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு கட்டணங்கள் செலுத்துதல் ஏதாவது விடுபட்டிருப்பின் மற்றும் மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் உரிமையாளரால் தொகை செலுத்தப்பட வேண்டும். மறுப்பு தெரிவித்து தொகை செலுத்தப்படவில்லை எனில் மனைப்பிரிவு உரிமையாளருக்கு வழங்கப்பட்ட அனுமதி ஆணை எவ்வித முன்னறிவிப்பு இன்றி இரத்து செய்யப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
அண்ணாகிராமம்

பெறுதல்

திரு. இராதாகிருஷ்ணன் [illegible]
எண் 23, ரங்கநாதன் ரோடு
ரங்கசாமி லே-அவுட்,
விழுப்புரம், விழுப்புரம் மாவட்டம்

நகல் : நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பபடுகிறது.

நகல் : சார்பதிவாளர். சார்பதிவாளர் அலுவலகம், புதுப்பேட்டை.

நகல் : ஊராட்சிமன்றத்தலைவர், பண்டாரக்கோட்டை ஊராட்சி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்.